## ஆய்வுச் சுருக்கம்

இலங்கையில் முன்பள்ளிகளை அரசு பொறுப்பேற்காத தன்மை காணப்படுகின்றது. ஆதலால் முன்பாடசாலைக் கல்வி பல்வேறு அமைப்புக்களால் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. முன்பாடசாலைக்கல்வியை நடைமுறைப்படுத்தும் ஒவ்வொரு நிறுவனமும் வெவ்வேறுபட்ட கலைத்திட்டத்தை பின்பற்றி வருவதனை கருத்திற்கொண்டு சிறுவர் செயலகம், மகளிர் விவகார அமைச்சு, முன்பள்ளி ஆசிரியர்களுக்கான கலைத்திட்ட அம்சங்களைக் கொண்ட ''ஆரம்ப பிள்ளைப்பருவ வளர்ச்சி'' எனும் வள வழிகாட்டி நூலினை சிறுவர் பாதுகாப்பு நிதி அனுசரணையுடன் 2007 ஆம் ஆண்டில் வெளியிட்டுள்ளது. அதில் முன்பள்ளி மாணவர்களுக்கான மொழிவிருத்தி, உடல் விருத்தி, அறிவாற்றல் விருத்தி, ஆக்க் விருத்தி, சமூகமனவெழுச்சி விருத்தி போன்ற கலைத்திட்ட அம்சங்களும் அவற்றினை நடைமுறைப்படுத்தும் செயற்பாடுகளும் தெளிவாக சுட்டிக் காட்டப்பட்டுள்ளன.

திருகோணமலை கல்விக் கோட்டத்தில் 84 முன்பள்ளிகள் பதிவுசெய்யப்பட்ட முன்பள்ளிகளாக காணப்படுகின்றன. அம்முன்பள்ளிகள் அனைத்தும் மேற்படி கலைத்திட்ட அம்சங்களையே பின்பற்றுகின்றன. எனினும் அக்கலைத்திட்ட அம்சங்கள் பொருத்தமான வகையில் உரிய செயற்பாட்டினூடாக முன்னெடுக்கப்பட்டால் மட்டுமே மாணவர்களிடத்தே சிறப்பான விளைதிறனை எதிர்பார்க்க முடியும். இவ்விளைதிறனை மதிப்பிட்டு அதற்கான காரணங்களையும் பொருத்தமான சிபார்சுகளையும் முன்வைக்கும் நோக்கிலே, ''திருகோணமலை கல்விக் கோட்ட முன்பள்ளிகள் பின்பற்றும் கலைத்திட்ட அம்சங்களின் விளைதிறன் பற்றிய ஒரு மதிப்பீடு'' எனும் ஆய்வு ஆய்வாளரால் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

திருகோணமலை கல்விக்கோட்டத்திற்குட்பட்ட முப்பது முன்பள்ளிகளும் அவற்றின் ஆசிரியர்களும் முன்பள்ளிகளுக்கு பொறுப்பான உதவிக் கல்விப்பணிப்பாளரும் ஆய்வு மாதிரிகளாக கொள்ளப்பட்டனர். வினாக்கொத்து, நேர்காணல், செவ்வைகாண் பட்டியல் ஆகிய ஆய்வு கருவிகளைப் பயன்படுத்தி தரவுகள் சேகரிக்கப்பட்டு, எளிய புள்ளி விபரவியல் பகுப்பாய்வு முறை மூலம் பகுப்பாய்வு செய்யப்பட்டன. அதனடிப்படையில் மாணவர்கள் அடையவேண்டிய விருத்திகள் தனித்தனியே மதிப்பீடு செய்யப்பட்டபோது, கிடைத்த பெறுபேறுகள் திருப்பதிகரமானதாக அமையவில்லை. எனவே அதன் விளைதிறனை அதிகரிக்கக் கூடிய நடைமுறைக்குச் சாத்தியமான வழிமுறைகளும் ஆய்வாளரால் முன்வைக்கப்பட்டன.